**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 339/2019 |
| Name | : Sathishkumar |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 2 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து தற்போது விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.10.2017ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்களுக்கும் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் நேரு காந்தி அவர்களும், என்.ஜி.புதுார் நால் ரோடு சென்றும் ரோந்து அலுவலில் இருந்த போது என்.ஜி புதுார் ஊருக்கு மேபுறம் செல்லும் அமராவதி ஆற்றிற்கு செல்லும் கிழமேல் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 74 P 8212 Mahindar Pickup வாகனத்தில் வந்தவர்கள் போலீசை கண்டவுடன் வண்டியை நிறுத்திவிட்டு ஓட முயற்சித்தவர்களை பிடித்து விசாரித்ததில் அவர்களில் வண்டியை ஓட்டி வந்தவர் நெய்காரபட்டியைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில், அவருடன் வந்தவர்கள் பெரிய கலைமுததுாரைச் சேர்ந்த அப்துல் காதர், காவலப்பட்டியைச் சேர்ந்த துரைசாமி, வீரசேகர் என தெரிந்தது. மேற்படி நபர்களை விசாரித்ததில் அவர்கள் நான்கு பேரும்

அமரவாதி ஆற்றில் இருந்து கனிம வளமான ஆற்று மணலை திருடி வந்தது ஒப்புக்கொண்டதால் அதிகாலை 01.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து மேற்படி எதிரிகள் நான்கு பேரும் உதவி ஆய்வாளர் கைது செய்தார். பின்பு எதிரி 1 ஆன முகம்மது இஸ்மாயில் ஆஜர்படுத்திய சுமார் 1 யூனிட் ஆற்று மணலும் அவரது வாகனம் மகிந்தரா பிக்கப் வாகனத்தையும் அதிகாலை 01.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் நேரு காந்தியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். பின்பு எதிரிகள் மற்றும் கைப்பற்றிய சொத்துடன் அதிகாலை 02.30 மணிக்கு காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆஜர் எதிரிகள் தான் அன்று மணல் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஆவர். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கை பொறுத்தவரை மணல் எடுத்த இடம் சம்பவ இடம் என்றால் சரியல்ல. மணல் எங்கு எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அமராவதி ஆற்றுக்கு செல்லும் சாலையில் குளத்துப்பாளையம் கிராமம் உள்ளது. அமராவதி ஆற்றுக்கு செல்லும் சாலையில் இருந்து 20 மீட்டர் தென்புறமாக சென்று பின்பு கிழபுறமாக குதிரையாறு சோதனைச் சாவடி செல்லும் சாலை செல்கிறது என்றால் சரிதான். எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எதிரிகள் கைது செய்யப்பட்ட பின்பு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகஜரில் அடித்தல், திருத்தல், இடைச்செறுகல் இல்லை. கைப்பற்றுதல் மகஜர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கையெழுத்துபோட்ட சமயத்தில் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் எழுதப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். உதவி ஆய்வாளர் நிலைய பாராவிடம் கேட்டு குற்ற எண்ணை எழுதினார்.

(2) கைப்பற்றுதல் மகஜர் எழுதப்பட்ட சமயத்திலேயே தகவல் எதுவும் பெறப்படாமல் குற்ற எண் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னபடி கைப்பற்றுதல் மகஜர்

தயார் செய்யப்படவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கைது குறிப்பாணை எனது முன்னிலையில் தான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். என் முன்னால் எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள். கைது குறிப்பாணை என் முன்னால் தான் எழுதப்பட்டது. யாரால் எழுதப்பட்டது என்றால் உதவி ஆய்வாளரால் எழுதப்பட்டது. கைது குறிப்பாணையில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் குற்ற எண் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை.

(3) கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் 1ம் எதிரி முகம்மது இஸ்மாயில் தான் வாகனத்தின் உரிமையாளர். உரிமையாளர் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் பார்வையிடப்பட்டு கைப்பற்றப்பட்டதா என்றால் அதைப் பற்றி தெரியாது. எதிரிகள் வேலைக்கு வந்துவிட்டு காவல் நிலையத்தை கடந்த போது காவலர்கள் தடுத்து நிறுத்தியபோது வாக்குவாதம் ஏற்பட்டு அதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரி வாகனத்தின் உரிமையாளர் இல்லை என்றும், எதிரிகள் மணல் கடத்தி வரவில்லை என்றும், பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதால் தான் ஆவணங்களில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கின் சொத்துக்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:50:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 339/2019 |
| Name | : Manikandan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.02.2026**

**எதிரிகள் 2 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் சங்கரராமநல்லூாரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 2017ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை காலை 07.00 மணியளவில் சங்கரராமநல்லூர் தோட்டத்தில் இருந்து என்.ஜி புதுார் வீட்டிற்கு சாப்பாடு வாங்க சென்றேன் அப்போது என்.ஜி புதுார் நால் ரோடு அருகில் போலீசார் மணல் திருட்டு வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் வின்னேஷ் என்பவர் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் சாப்பாடு வாங்க செல்வது தவிர வேறு வேலைக்கு நான் சென்றதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் வரைபடம் வரைந்து கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். வரைபடத்தில் கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். மொத்தமாக ஒரு கையெழுத்து போட்டேன். நான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.05 17:50:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்